
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1191

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

59

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.




# சமூகத்தைச் சீர்திருத்திய ஆசிரியர்!

செந்துறை பள்ளியில், பொன்னம்பலனார் பணியாற்றிய 1954-1957-ஆம் ஆண்டு வரையிலும் அங்கு தலைமை ஆசிரியராக இருந்தவர் பார்ப்பனர். அவருக்கு தமிழும் பிடிக்காது, தமிழாசிரியரும் பிடிக்காது. தமிழ்ப்பண் பாடப்படுவதை நிறுத்தினார், அந்தத் தலைமை ஆசிரியர். அப்போது மாணவர் தலைவராக இருந்தவர் பொன்னடியார். அதனால், பள்ளியிலேயே ஒரு மொழிப்போர் மூண்டது. பொன்னடியார் பின்னால் மாணவர்கள் அணிவகுத்து எதிர்ப்புக்களம் கோர்க்க, தலைமை ஆசிரியர் கொட்டம் அடங்கி, அனைத்தும் தனித்தமிழ்மயமானது. இந்த மொழிப்போராட்டத்தை 'விடுதலை' ஒவ்வொரு நாளும் செய்தியாக்கி, தமிழ்நாடு தழுவிய அளவில் கவனம் ஈர்க்கச் செய்தது.

வருகைப் பதிவின்போது, 'பிரசன்ட் சார்' என்று சொல்கிற வழக்கத்தை மாற்றி, 'உள்ளேன் ஐயா' என்று மாணவர்களைச் சொல்லவைத்தார். அனைத்து அரசுப் பள்ளிகளிலும் தமிழாசிரியர்கள் வகுப்பில் 'உள்ளேன் ஐயா' என்று மாணவர்கள் சொல்வது நிரந்தர வழக்கமாகிவிட்டது. 'நேர் நில்', 'பாடுக', 'செல்க' என அனைத்தும் தமிழானது. பள்ளிக்கூடத்தில் மட்டுமல்ல, ஊரிலும் சாதிய முறைக்கு எதிரான துணிச்சலான செயல்களில் ஈடுபட்டார். சுயமரியாதைத் திருமணங்களைத் தலைமையேற்று நடத்தி வைத்தார். 1957-இல் சேலம் தமிழ்ப்பேரவை சார்பில், 500 வெண் பொற்காசுகளை பெரியார் வழங்கி, தமிழ் மறவர் பட்டத்தையும் அவருக்குச் சூட்டினார். இந்த நிகழ்ச்சியில்தான் தேவநேயப் பாவாணருக்கு 'திராவிட மொழிஞாயிறு' பட்டமும் வழங்கப்பட்டது.

1959-ஆம் ஆண்டு, பள்ளியில் ஒரு நாள் அவர் பாடம் நடத்திக்கொண்டிருந்தபோது, அங்கு வந்த கல்வி அலுவலர் ரத்தின சாஸ்திரி, உடனடியாக பொன்னம்பலனாரை அரவக்குறிச்சிக்கு இடம் மாற்றிவிட்டார். இதற்கு ஒரே காரணம், அவர் கருப்புச் சட்டையில் இருந்தார் என்பது மட்டும்தான். "உமது முடி கருப்பாக இருக்கிறதே? அதை நீக்கிவிட்டு நீர் வரலாமே!" என அந்தக் கணமே பதிலடி கொடுத்தார் பொன்னம்பலனார். அரவக்குறிச்சியிலும் தலைமை ஆசிரியருடன் இணைந்து காமராசர் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டத்திற்காக மாலை வேளைகளில் அரிசி, நெல் வாங்கி வருவது எனச் செயல்பட்டுள்ளார் பொன்னம்பலனார். அரவக்குறிச்சி தலைமை ஆசிரியர் பொன்னம்பலனாருக்கு நண்பர் என்பதால், பொன்பரப்பிக்கு மாறுதலாகி வந்துவிட்டார். பணி ஓய்வுக்குப் பிறகு, செந்துறையில் அவரின் பெரியாரியப் பணி நீண்டது.

இறுதியில் புற்றுநோய் காரணமாக, 2.12.1973 அன்று காலமானார் பொன்னம்பலனார். அந்த நாளில் அரியலூர் மாவட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகள் அனைத்துக்கும் விடுமுறை அளிக்கப்பட்டு, அவரிடம் பயின்ற ஆசிரியர்கள், ஆயிரக்கணக்கான மாணவர்கள் புடைசூழ, இறுதி ஊர்வலம் நடைபெற்றது. சென்னை, பொது மருத்துவமனையில் அவர் சிகிச்சையில் இருந்த காலகட்டத்தில் பெரியார் அவரைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

பொன்னம்பலனார் மறைந்த அதே மாதம் 24-ஆம் நாள், பெரியாரும் காலமானார். இருவருக்கும் சேர்த்து கீழமாளிகையில் ஒன்றாகச் சிலை வைத்திருக்கிறார்கள். பொன்னம்பலனார் வெறும் தமிழ் அறிஞராக மட்டும் இல்லாமல், பெரியாரின் பகுத்தறிவுப் போர் வாளாகவும் திகழ்ந்தார். ஆசிரியராக மட்டுமல்லாமல் சமூகத்தைச் சீர்திருத்தும் செயல்பாட்டாளராகவும் திகழ்ந்தார். அவரால் கருப்புச்சட்டை அணிந்த மாணவர்கள் அதை அடுத்தடுத்த தலைமுறைக்கும் கடத்தி, இன்றைக்கும் செந்துறையைத் திராவிட இயக்கக் கோட்டை யாகவே வைத்திருக்கிறார்கள்.

...பயணம் தொடரும்



### ஆட்சி மாற்றமும் காட்சி மாற்றமும்...

2026 தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர், மேற்கு வங்கத்தில் பாரதிய ஜனதா கட்சியின் வன்முறை வெறியாட்டங்கள் உச்சத்துக்குச் சென்றுள்ளன.

மே 4 தேர்தல் முடிவு வெளியானதில் இருந்து, பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகங்களை உடைப்பது, எரிப்பது, ஊழியர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்குவது என வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

இதன் உச்சமாக, முர்ஷிதாபாத் மாவட்டத்தில் மாமேதை லெனின் சிலையை உடைத்து அப்புறப்படுத்தியுள்ளனர். திரிபுரா மாநிலத்தில் ஆட்சியைப் பிடித்தபோது, இதேபோன்று லெனின் சிலையை உடைத்து, வன்முறை வெறியாட்டம் செய்த பா.ஜ.க. குண்டர்கள், தற்போது மேற்கு வங்கத்திலும் கம்யூனிஸ்ட் தலைவரின் சிலையை உடைத்துள்ளனர்.

காவலர்கள் முன்னிலையில், மசூதியை இடித்து சேதப்படுத்துவது, பராசத் மாவட்டத்தில் பொது இடங்களில் இஸ்லாமிய பெயர்ப் பலகைகளைச் சேதப்படுத்தி, வேறு பெயர்களை மாற்றுவது என அத்துமீறல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த அத்துமீறல்கள், வன்முறைகள் அனைத்தும் காவல் துறை, துணை ராணுவப்படை முன்னிலையிலேயே நடைபெற்று வருகின்றன. ஆட்சி மாறியதும் காட்சி மாறி வருகிறது. இதுதான் அவர்கள் உருவாக்க விரும்பிய மாற்றம் என மக்கள் அதிர்ச்சியுடன் இந்தக் காட்சிகளைக் கண்டு வருகின்றனர்.

## ஃப்ளாஷ்பேக்




### தில்லித் தமிழ்ச் சங்க முப்பெரும் விழாவில்...



இரா.முகுந்தன்

2008-ஆம் ஆண்டு டிசம்பர் 4-ஆம் தேதி, தில்லித் தமிழ்ச் சங்கத்தில் திருவள்ளுவர் சிலை நாட்டு விழா, முத்தமிழ்த் தோரணவாயில் கால்கோள் விழா, செம்மொழிச் செம்மல் விருது வழங்கும் விழா என முப்பெரும் விழாவாகப் பொதுச் செயலாளராக இருந்த நானும் தமிழ்ச் சங்கத் தலைவர் எம்.என்.கிருஷ்ணமணி அவர்களும் நடத்தினோம். முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு செம்மொழிச் செம்மல் விருது வழங்கப்பட்டது. கலைஞர் அவர்கள் திருவள்ளுவர் சிலையை நாட்டி சிறப்புரையாற்றினார். டெல்லி முதலமைச்சர் ஷீலா தீட்சித், ஒன்றிய அமைச்சர்கள் ப.சிதம்பரம், டி.ஆர்.பாலு, கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார்கள். அப்போது எடுத்த படம் இது.

**– இரா.முகுந்தன்,**
**முன்னாள் பொதுச்செயலாளர், தில்லித் தமிழ்ச் சங்கம்,**
**அனைத்திந்திய தமிழ்ச் சங்கப் பேரவை, டெல்லி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

109

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."



# தி.மு.க. இல்லாமல் தமிழ்நாடு இல்லை!

**இரண்டு திராவிடக் கட்சிகளின் பிடியில் இருந்த தமிழ்நாடு விடுவிக்கப்பட்டுவிட்டதாகவும், அதிலும் தி.மு.க.வின் கட்சித் தலைவரே வெற்றி பெற முடியாமல் போனதால் இனி, அதற்கு எதிர்காலம் இல்லை என்றும் ஊடகங்களில் ஆரூடம் கணிக்கிறார்களே?**

முதலமைச்சராகவே ஆக முடியாது என ஜாதகக் கட்டம் மூலம் ஆரூடம் கணித்துச் சொன்னவர்களின் முகத்தில் கரியைப் பூசி, தன் கொள்கை உரத்தாலும் தலைமைப் பண்பாலும் மக்களின் பேராதரவைப் பெற்று 2021-இல் தமிழ்நாட்டின் முதலமைச்சரானவர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ஐந்தாண்டுக்காலம் சிறப்பான நல்லாட்சியை வழங்கியவர். இந்தியாவுக்கே முன்னோடியாகப் பல திட்டங்களைக் கொடுத்து, தமிழ்நாட்டைப் பல்வேறு இலக்குகளில் முதன்மை மாநிலமாக்கிய பெருமைக்குரியவர். தேர்தல் வெற்றி-தோல்வி என்பது தி.மு.க.வுக்குப் புதியதல்ல. 1991-ஆம் ஆண்டு தேர்தலில் துறைமுகம் தொகுதியில் தலைவர் கலைஞர் மட்டுமே வென்றார். கழகத்தின் அனைத்து வேட்பாளர்களும் தோல்வியைத் தழுவினர். (நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எழும்பூர் தொகுதிக்கு, பின்னர் தேர்தல் நடந்தபோது, அதிலும் தி.மு.க. வென்றது). ஒரு சீட் மட்டுமே வென்றிருந்த நிலையில், அடுத்த ஐந்தாண்டுகளில், 1996-ஆம் ஆண்டு தி.மு.கழகம் மகத்தான வெற்றியைப் பெற்றது. அதுபோல, தி.மு.க. மீண்டும் வெல்லும்.

இரண்டு திராவிடக் கட்சிகள் என்று தி.மு.க.வுடன் அ.தி.மு.க.வை இணைத்துச் சொல்வது என்பது, அ.தி.மு.க. செய்யும் தவறுகளைத் தி.மு.க.வின் மீதும் சேர்த்து எழுதுவதற்கு இன எதிரிகள் செய்யும் தந்திரமாகும். உண்மையில், அ.தி.மு.க. என்பது போலி திராவிடக் கட்சி. எம்.ஜி.ஆர். காலத்திலேயே அது மெல்ல அம்பலமாகி, ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் சங்கித் தனத்திற்கு மாறி, எடப்பாடி பழனிசாமி தலைமையில் பா.ஜ.க.வின் அடிமையாகவே ஆகிவிட்டது. தமிழ்நாட்டின் ஒரே வலிமையான திராவிட அரசியல் இயக்கம் தி.மு.க.தான். பல நேரங்களில் அ.தி.மு.க.வை வைத்து, தி.முக.வை அழிக்க நினைத்த டெல்லி பாதுஷாக்கள், அது முடியாமல் போன நிலையில், இப்போது 'இரண்டு திராவிடக் கட்சிகள் இல்லாத தமிழ்நாடு' என்று உருட்டுகிறார்கள். ஒரே திராவிட அரசியல் பேரியக்கமான தி.மு.க. இல்லாமல் தமிழ்நாடு இல்லை.

2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி பெற்றுள்ள வாக்குகள் 1 கோடியே 54 இலட்சத்து 82 ஆயிரத்து 782 ஆகும். ஆட்சிக்கான பெரும்பான்மை கிடைக்காமல் வென்றுள்ள கட்சி தி.மு.க.வைவிட 17.43 இலட்சம் வாக்குகள் மட்டுமே கூடுதலாகப் பெற்றுள்ளது. அதாவது, 3.52% வாக்குகள்தான் அதிகம். இதைக் கடந்து வரவும், பெரும் வெற்றி பெறவும் தி.மு.க.வால் முடியும். தி.மு.க.வால் மட்டும்தான் முடியும்.

...வினா தொடரும்.

## நம் வரலாறு

### கம்பராமாயணச் சொற்போர்!

9.2.1943 அன்று சென்னை சட்டக்கல்லூரி மண்டபத்தில், கம்பராமாயணம், பெரிய புராணம் குறித்து விவாதம் நடைபெற்றது. இராமச்சந்திர செட்டியார் தலைமையில் நடைபெற்ற இந்த உரையாடலில், அண்ணா, ஈழத்தடிகள், ரா.பி.சேதுப்பிள்ளை, சீனிவாசன் ஆகியோர் பேசினர். அண்ணாவின் இந்த உரைதான் 'தீ பரவட்டும்' என்ற நூலாக வெளிவந்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900